# ***நெருக்கடி மையம்*** *- எமது உதவி தேவைப்படுகிறதா?*

### உங்கள் சொந்த வீட்டில் நீங்கள் பாதுகாப்பாக இல்லையா?

நற்பேறற்ற விதமாக, பல பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகள் தங்கள் சொந்த வீட்டிலேயே வன்முறைக்கும் வன்தாக்குதலுக்கும் உள்ளாகிறார்கள். நார்வே நாட்டில், நாங்கள் இதனை “நெருக்கமான உறவுகளில் வன்முறை” என்று அழைக்கிறோம். இதற்கான பொருள் என்னவெனில், உங்களுக்கு நெருக்கமாக இருப்பவரால், எடுத்துக்காட்டாக வாழ்க்கைத் துணைவர், பெற்றோர், உடன் பிறந்தவர் அல்லது சொந்த குழந்தை உள்ளிட்டோரால் நீங்கள் வன்முறைக்குஃவன்தாக்குதலுக்கு உள்ளாவதாகும்.

### வன்முறைஃவன்தாக்குதல் ஆகியவற்றின் பல வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- உடல்ரீதியானவை (அடித்தல், உதைத்தல், முடியைப் பிடித்து இழுத்தல், பிடித்து வைத்திருத்தல்)
- மனரீதியானவை (சங்கடமளிக்கும் சொற்களை சொல்லுதல், சங்கடமளிக்கும் பெயர்களால் அழைத்தல், கட்டுப்படுத்தல், தனிமைப்படுத்தல், அச்சுறுத்தல்)
- பாலுறவுரீதியானவை (வன்புணர்வு, கட்டாயப்படுத்தி பாலுறவு கொள்தல்)
- பொருள்ரீதியானவை (பொருட்களை எறிதல், பொருட்களை உடைத்தல், உங்களுக்கு மிகப்பெரிய அளவில் முக்கியமாக இருக்கிற ஒன்றை சேதப்படுத்துதல்)
- நிதியாதாரம் சம்பந்தமானவை (உங்கள் பணத்தை எடுத்துக்கொள்தல், உங்கள் சொந்தப் பணத்தையே உங்களுக்கு கொடுக்காமல் இருத்தல், உங்களுக்கு புரியாத நிதி சம்பந்தமான ஆவணங்களில் உங்களை கையொப்பமிட கட்டாயப்படுத்தல்)
- கட்டாயத் திருமணம் (ஒருவரை தமது விருப்பத்திற்கு எதிராக திருமணம் செய்ய அச்சுறுத்தல்ஃகட்டாயப்படுத்தல்)
- பிறப்புறுப்பு உருச்சிதைவு (பெண் பிறப்புறுப்பு மொட்டு முனைத்தோலை வெட்டி நீக்குதல்)
- மனித ஆள்கடத்தல் (பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகளை கடத்தி வர்த்தகத்தில் ஈடுபடுதல்)

### நீங்கள் இது பற்றி யாருடனாவது பேச வேண்டுமா?

நீங்கள் அருகில் உள்ள ஒரு நெருக்கடி மையத்தை தொடர்பு கொள்ளவும். நார்வே நாட்டில், அனைத்து பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகளும் தாங்கள் அச்சுறுத்தப்பட்டாலோ அல்லது வன்முறைக்கு உள்ளானாலோ ஒரு நெருக்கடி மையத்திடம் இருந்து உதவியைப் பெறுவதற்கு உரிமை கொண்டுள்ளனர்.

### நீங்கள் நார்வே நாட்டில் புதிதாக குடியேறி உள்ளீர்களா?

நெருக்கடி மையங்களில் பணியாற்றுகிற நாங்கள் மற்ற நாடுகளைச் சேர்ந்த மற்றும் மற்ற பண்பாடுகளைச் சேர்ந்த ஏராளமான மக்களை சந்திக்கின்றோம். **உங்களுக்கு உதவுவதற்காக ஒரு மொழிபெயர்ப்பாளருக்கான அவசியம் இருக்கிற போது நாங்கள் எப்போதுமே அவரைப் பயன்படுத்துகிறோம்.** எமது ஊழியர்கள் தொழில்முறை பயிற்சியைப் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல் வன்முறைக்கு உள்ளான மக்களுக்கு பிரத்யேகமாக உதவுவதற்குத் தேவையான சிறப்பு சாதுர்யதிறன்களையும் பெற்றுள்ளனர். நார்வே நாட்டில் உங்களுக்கு உள்ள உரிமைகள், கடமைகள், மற்றும் விருப்பத்தேர்வுகள் குறித்து அவர்கள் உங்களுக்கு தெரிவிப்பார்கள்.

தொழில்முறை இரகசியத்தைப் பேணிக்காக்க நாங்கள் உறுதிமொழி எடுத்திருக்கிறோம்! உங்கள் கதை எங்களுடன் முழுப்பாதுகாப்புடன் இருக்கும். நீங்கள் சொல்கிற பிரச்சினைகளுக்கான தீர்வு நோக்கி முன்னெடுத்துத் செல்ல வேண்டிய நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தேவைப்படுகிற வகையில் மற்றும் உங்களுக்கு தேவைப்படும் உதவியைப் பெற உங்களுக்கு உதவுகிற வகையில் நீங்கள் சொல்கிற விசயங்களை வெளிப்படுத்தலாம் என்று நாம் இருவரும் ஒன்றாக இணைந்து ஒப்புக்கொண்டால் ஒழிய நீங்கள் எங்களிடம் சொல்கிற எதையும் நாங்கள் வெளிப்படுத்த மாட்டோம்.

எனினும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத வீட்டுச் சூழ்நிலைகளுடன் உள்ள குழந்தைகளைப் பற்றி அறிய வருகிற பட்சத்தில் அது குறித்து நாங்கள் குழந்தை நலச் சேவைகளிடம் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். இதனால், பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் தாங்கள் ஒரு நல்ல வாழ்வைப் பெறுவதற்குத் தேவையான உதவியைப் பெற முடியும்.

### நாங்கள் பின்வருவனவற்றுக்காக உங்களுக்கு உதவ முடியும்:

நீங்களும் உங்கள் குழந்தைகளும் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு வசிப்பதற்கு ஒரு பாதுகாப்பான இடத்தை நாங்கள் உங்களுக்கு வழங்க முடியும் அல்லது நீங்கள் உங்கள் வீட்டிலேயே வசித்தபடி உங்கள் நிலைமையைக் குறித்துப் பேசுவதற்கு மட்டும் நெருக்கடி மையத்திற்கு வந்து செல்கிறபடியான விருப்பத்தேர்வையும் நீங்கள் எடுக்கலாம். நீங்கள் சொல்வதை கவனித்துக் கேட்கிற ஒரு தொழில்முறை நபரை நெருக்கடி மையத்தில் நீங்கள் சந்திப்பீர்கள். நீங்கள் ஒரு மருத்துவர், வழக்கறிஞர், காவல்துறை, யுஏ, குழந்தை பராமரிப்புச் சேவைகள் அல்லது இதர முகமைகள் உள்ளிட்டோரை தொடர்புகொள்ள நாங்கள் உங்களுக்கு உதவ முடியும். நீங்கள் இத்தகையோரை சந்திக்க செல்கிற போது நீங்கள் விரும்புகிற பட்சத்தில் நாங்கள் உங்களுக்கு ஆதரவளித்து உங்களுடன் சேர்ந்து வருவோம் மேலும் பாதுகாப்பான சூழ்நிலை இதை சாத்தியமாக்குகிறது. உங்களுக்கு அவசியம் இருக்கிற பட்சத்தில் நீங்கள் நெருக்கடி மையத்தை விட்டுச் சென்ற பிறகும் கூட, நாங்கள் தொடர்ந்து உங்களுடன் தொடர்பில் இருப்போம்.

எமது பங்கு என்பது வன்முறையற்ற ஒரு புதிய மற்றும் சிறந்த வாழ்வை நீங்கள் நடத்த உதவுவதற்கு உங்களுக்குத் தேவையான தகவல்கள், ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றை வழங்குவதாகும்.